பக்கங்கள் 24

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆடி 12 திங்கட்கிழமை 28.07.2025 | அதிர்வு 358


## இரு பெண்கள் விபத்தில் சாவு!

### நால்வர் படுகாயம்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் அங்குணகொலபெலஸ்ஸவில் 175 ஆவது கிலோமீற்றர் தூண் அருகே நேற்று இடம்பெற்ற வாகன 02


## 13 வேண்டாம் என்போர் அதனைவிட அதிகாரம் உள்ள அரசமைப்பைத் தருவோம் என உறுதியளிப்பார்களா?



### சிரேஷ்ட ஊடகவியலாளர் தனபாலசிங்கம் கேள்வி

13 ஐ வேண்டாம் எனக் கூறும் தமிழ்க் கட்சிகள் 13ஐ விட அதிகாரம் உள்ள ஒரு அரசமைப்பைத் தமிழ் மக்களுக்குக் கொண்டு வருவோம் என மக்களுக்கு ஆணை வழங்க முடியுமா என சிரேஷ்ட ஊடகவியலாளர் வீ.தனபாலசிங்கம் கேள்வி எழுப்பினார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தந்தை செல்வா நினைவரங்கில் இடம்பெற்ற ரெலோ அமைப்பின் வீரர்கள் தின 02



# மாகாண சபை தேவையா? மீள ஆராய வேண்டுமாம்!

### முன்னாள் பிரதமர் தினேஷ் கூறுகின்றார்

மாகாண சபை முறைமை நாட்டுக்கு அவசியமா என்பதை மீள் சிந்திக்க வேண்டிய காலம் வந்திருக்கிறது. மாகாண சபை முறைமையை அப்படியே கொண்டு செல்வதா? அல்லது அப்படியே முடித்துக் கொள்வதா? அல்லது அதனை முழுமையாக மறுசீரமைப்பு செய்வதா என்பது தொடர்பில் நாடளாவிய ரீதியில் கலந்துரையாடல்களும் மீளாய்வும் இடம்பெற வேண்டியது அவசியம் என்று முன்னாள் பிரதமரும் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவருமான தினேஷ் குணவர்தன கூறியிருக்கின்றார்.

நாற்பது வருடங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமை இன்றைய அரசியல் சவால்களை எதிர்கொள்கின்றதா என்பதை நாம் ஆராய வேண்டும். 03




பிரதம நீதியரசர் பதவியில் இருந்து முர்து பெர்னாண்டோ அம்மையார் ஓய்வு பெற்றுச் செல்ல, அந்த இடத்துக்குப் புதிய பிரதம நீதியரசராகப் பிரீதி பத்மன் சூரசேன பதவியேற்று இருக்கின்றார்.

இருவருமே நடுநிலையான – துணிச்சலான – சர்ச்சைக்கு அப்பாற்பட்ட – திறமையான – நீதியரசர்களாக சட்ட வட்டாரங்களில் மதிக்கப்படுபவர்கள்.

நீதியை நிலைநாட்டும் விடயத்தில் சற்றும் வளைந்து கொடுக்காதவர் என்ற தமது பெயரை தமது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்புகள் மூலம் உறுதிப்படுத்திச் செல்கின்றார் முர்து பெர்னாண்டோ அம்மையார். 03


உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

## கறுப்பு ஜூலை நினைவேந்தலையொட்டி

# நெல்லியடியில் நேற்று தீப்பந்தப் போராட்டம்!

## சுமந்திரன் தலைமையில் தமிழரசு பங்கேற்பு







**(எஸ்.நிதர்ஷன்)**

கறுப்பு ஜூலை நினைவேந்தலையொட்டி யாழ். வடமராட்சி, நெல்லியடி பஸ் நிலையம் முன்பாகத் தீப்பந்தப் போராட்டம் நடைபெற்றது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் தலைமையில் உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், கட்சியின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**13 வேண்டாம்...**

நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ்த் தேசிய அரசியலில் பயணிக் கின்ற தமிழ்க் கட்சிகளிடத்து நிலையான ஒரு கூட்டு இல்லாமை மக்களின் எதிர் கால அரசியலை முன்னெடுப்பதில் பாரிய சவால்களை எதிர்கொண்டு வருகின்றது.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வாக 13 ஐ நடைமுறைப்படுத்துமாறு தமிழ்க் கட்சிகள் கோரிக்கைகளை முன்வைத்து வரும் நிலையில் சிலர் 13 ஐ வேண்டாம் எனக் கூறுகின்றார்கள்.

நான் அரசியல் கட்சி சார்ந்தவன் அல்லன். நான் ஒரு ஊடகவியலாளர். பதின்மூன்றை வேண்டாம் எனக் கூறுப வர்கள் பதின்மூன்றில் உள்ள அதி காரங்களைவிடக் கூடுதலான அதி காரங்களைப் பெற்றுக்கொடுப்போம் என மக்களுக்கு உறுதி வழங்க முடியுமா?.

என்னைப் பொறுத்தவரை பதின் மூன்றை நிராகரிப்பவர்களால் மக்கள் முன் உறுதி வழங்க முடியாது.

பதின்மூன்றாவது திருத்தம் விரும் பியோ விரும்பாமலோ அரசியல் அமைப் பில் இருக்கின்ற விடயம். இந்தியாவின் அழுத்தம் காரணமாகவே இன்றும் அர சமைப்பில் 13 இருக்கின்றது. அல்லா விட்டால் வடக்கு – கிழக்கு பிரிந்தது போன்று தூக்கி எறியப்பட்டிருக்கும்.

13 ஆவது திருத்தம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வென் றெடுக்கக்கூடிய அதிகாரங்கள் இல்லா விட்டாலும் சிலவற்றை சாதிக்கக்கூடிய அல்லது கையாலாகக்கூடிய அதிகா ரங்கள் அதில் இருக்கின்றது.

மாகாண சபை ஆட்சி அதிகாரம் தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் இருந்தபோது அதைச் சரிவரப் பயன்படுத்தினோமா? இல்லை. தரகு அரசியல் செய்தோம்.

மாகாண சபைகளுக்கு உரிய அதி காரம் காலத்துக்கு காலம் பறிக்கப்பட்டு வந்தது உண்மை. இருந்தாலும் இருக் கின்ற அதிகாரங்களை ஏன் நாங்கள் பயன்படுத்தவில்லை என்பதற்கு நாங் களே பொறுப்பு.

சமஷ்டி தொடர்பில் பேசுகின்றோம். தற்போது உள்ளூராட்சி சபைத் தேர் தல் இடம்பெற்று சபைகளும் அமைக் கப்பட்டுள்ளன.

இந்த உள்ளூராட்சி சபைகள் அனைத் தும் ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நிலையில் அதனை நிராகரிக்கிறோம் என யாராவது கூற முடியுமா?

ஆகவே 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்திக்கொண்டு அதை விட அதிகாரம் உள்ள திருத்தத்தை கொண்டுவர முடியுமா என சிந்திப்பதே நடைமுறைச் சாத்திய விடயம்." – என்றார்.

---

**இரு பெண்கள்...**

விபத்தில் இரண்டு பெண்கள் உயிரி ழந்தனர். மேலும் நால்வர் படுகாயம டைந்தனர்.

மத்தளவில் இருந்து கொழும்பு நோக்கி வந்த சிறிய வானின் பின்புற டயர் வெடித்து வாகனம் தடுப்புச் சுவரில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்து இடம்பெற்ற நேரத்தில் வானில் 6 பேர் இருந்தனர், காயமடைந்த வர்கள் அம்பாந்தோட்டை பொது வைத் தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட னர்.

இறந்தவர்கள் 72 மற்றும் 44 வய துடைய இரண்டு பெண்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

அதேவேளை புதிதாகப் பிரதம நீதியரசராகப் பதவியேற்றிருக்கும் பிரீதி பத்மன் சூரசேனவும் தமது பெயருக்கு ஏற்ப அநீதிக்கு எதிரான விடயங்களை அடியோடு அழிக்கும் சூரசேனையாகவே பலராலும் கருதப்படுகின்றார்.

முன்னைய ஆட்சிகளின் ஊழல், முறைகேடுகள், நிர்வாகச் சீர்கேடுகள், முறையற்ற ஆட்சி முறைமைகள் போன்றவை குறித்து விசாரித்து, உறுதியான சட்ட நடவடிக்கை எடுப்பதில் இந்த ஆட்சிப் பீடத்திற்கு திடசங்கற்பம் இருக்குமாயின், அந்த ஏற்பாட்டுக்கு இந்தப் பிரதம நீதியரசர் நியமனம் பெரிதும் உதவுகின்ற சரியான நடவடிக்கை என்று சட்டத்துறையில் சிரேஷ்ட தரப்புகள் சுட்டிக் காட்டுகின்றன.

இலங்கை உயர்நீதிமன்றத்தின் வழக்கு விசாரணைகளில் உள்ள தேக்கம், தீர்ப்புகள் வழங்குவதில் காட்டப்படும் காலதாமதம், மெத்தனம், பொறுப்பற்ற போக்குகள் போன்ற அதிருப்தி தரும் நிலைமைகள் குறித்தும் புதிய பிரதம நீதியரசர் சற்றுக் கவனம் எடுப்பாராயின் அவரின் பதவிக்காலம், பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோனின் பதவிக்காலம் போன்று மதிப்புக்குரியதாக மாறும் என்பது நிச்சயம்.

என்ன நடக்கும் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

* * *

நமது கருத்துக்கள் மூலம் அவ்வப்போது சர்ச்சைகளைக் கிளப்புவதில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் சளைத்தவர் அல்லர்.

இப்போதும் பேருவளையில் உள்ள புனித ஆன்ஸ் தேவாலயத்தில் நடைபெற்ற ஒரு மத விழாவில் பேசுகையில் ஒரு சர்ச்சையை அவர் கிளப்பியிருக்கிறார்.

உலகம் முழுவதும் பல நாடுகளில் ஒரு பாலினத் திருமணம் சட்ட ரீதியாக ஏற்றுக் கொள்ளப்படும் விடயமாக மாறி வருகையில், ஒரு பாலினத் திருமணம் என்பது மனித உரிமை அல்ல, அதை ஏற்கக் கூடாது என்று அவர் கூறியிருக்கிறார்.

இத்தகைய விடயங்கள் நவீன சமூகத்தில் ஒருவகையான 'ஊழல் சித்தாந்தங்கள்' என்று வர்ணித்த அவர், அதிலே ஒரு பாலினத் திருமணத்திற்கான அழுத்தமும் அடங்கும், இந்த முறைமை பாரம்பரிய குடும்ப விழுமியங்களை குறை மதிப்பிற்கு உட்படுத்துகின்றது என்று குறைபட்டுக் கொண்டார்.

"இரண்டு ஆண்கள் அல்லது இரண்டு பெண்கள் எப்படி ஒரு குடும்பத்தை உருவாக்க முடியும்? அவர்கள் எப்படிக் குழந்தைகளைப் பெற முடியும்?" என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் கேள்வி எழுப்பினார்.

திருமணத்தை ஒரு தற்காலிக அனுபவமாகக் கருதக்கூடாது. அது தார்மீக மற்றும் ஆன்மீகப் புரிதலின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இன்றைய இளைஞர்களும், பெண்களும் பெரும்பாலும் சரியான விழிப்புணர்வு அல்லது அர்ப்பணிப்பு இல்லாமல் உறவுகளில் நுழைகிறார்கள். பெற்றோரின் வழிகாட்டுதல் மற்றும் ஆசீர்வாதங்களுடன் திருமணங்கள் ஏற்பாடு செய்யப்பட்ட முந்தைய காலங்களுடன் ஒப்பிடுகையில் இது வேறுபடுகிறது என்று அவர் மேலும் கூறினார்.

அத்தகைய பாரம்பரிய ஒட்டுறவு அல்லது இணைவு மிகவும் வெற்றிகரமானவை மற்றும் நிலையான குடும்பங்களுக்கு பங்களித்தன என்பதை கர்தினால் மல்கம் ரஞ்சித் வலியுறுத்தினார்.

மனித உரிமைகள் என்ற பெயரில், மாயையில் முன்னெடுக்கப்படும் சிதைந்த கருத்துகள் என்று தாம் விவரித்துள்ள செயற்போக்குக்கு எதிராக ஒன்று திரளுமாறு அவர் சமூகத்துக்கு அழைப்பு விடுத்தார்.

---

## மாகாண சபை...

மேலும் மாகாண சபை முறையின்றி கடந்த பல வருடங்களாக நாடு இயங்கி இருக்கிறது என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் தினேஷ் குணவர்தன சுட்டிக்காட்டினார்.

மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்ந்தும் நடத்தப்படாமல் தாமதமடைந்து வருகின்ற சூழலில் அது தொடர்பில் தினேஷ் குணவர்தனவின் நிலைப்பாட்டை வினவிய போதே அவர் கொழும்பு ஊடகம் ஒன்றிடம் இதனைச் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

கடந்த 2014ஆம் ஆண்டு இறுதியாக ஊவா மாகாண சபைக்கு தேர்தல் நடத்தப்பட்டதன் பின்னர் இன்னும் மாகாண சபைகளுக்கு தேர்தல்கள் நடத்தப்படவில்லை. கிட்டத்தட்ட 06, 07 வருடங்களாக தேர்தல்கள் நடத்தப்படாமல் தாமதமாகி வருகிறது.

மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதில் தேர்தல் முறை தொடர்பான சட்டசிக்கல் காணப்படுவதால் அதனை நிவர்த்தி செய்ய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் என்பன மாகாண சபைகள் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகின்றன. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அடுத்த வருடம் மாகாண சபைத் தேர்தல் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்திருக்கின்றது.


அந்த வகையில் முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன, இந்த மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில், மாகாண சபை முறைமை கடந்த காலங்களில் பயனற்றதாகவே இருந்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

"மாகாண சபைகள் இன்றி நாடு பல வருடங்கள் பயணித்திருக்கிறது. எனவே, இதற்குப் பின்னரும் இந்த மாகாண சபை முறை நாட்டுக்குத் தேவையா என்று சிந்திக்க வேண்டும். மாகாண சபை ஊடாக மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. மாறாக இதற்கு பாரியளவு நிதி செலவிடப்படுகிறது. எனவே, மாகாண சபை நாட்டுக்கு தேவையா என்பது தொடர்பில் மீள சிந்திக்க வேண்டிய காலம் மீள உருவாகியிருக்கிறது. இது தொடர்பில் சகல தரப்பினரும் கலந்துரையாட வேண்டும். தமது யோசனைகளை முன்வைப்பது அவசியம். மாகாண சபை முறைமை தொடர்பாக முழுமையான மீள் சிந்தனை அவசியமாகிறது. மாகாண சபை முறைமையை அப்படியே கொண்டு செல்வதா? அல்லது அதனை முழுமையாக மாற்றியமைப்பதா? அல்லது அதனை இல்லாமல் செய்வதா? என்பது தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார் தினேஷ் குணவர்தன.

மாகாண சபை முறைமையில் கடந்த காலங்களில் பல மாற்றங்களை செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. எனினும் அவை கைகூடவில்லை. அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டிருந்தார். இந்நிலையில் தினேஷ் குணவர்தன இது தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில் –

இன்றைய காலகட்ட சவால்களுக்கு இந்த மாகாண சபை முறைமை பதில் அளிக்கிறதா என்பது குறித்து சிந்திக்க வேண்டும். உள்ளூராட்சி மன்றங்கள் சிறப்பாக இயங்குகின்றன. நாட்டின் சகல பகுதிகளுக்குமான அபிவிருத்தியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கெடுக்கலாம். எனவே, இடையில் மாகாண சபை அவசியமா? என்ற கேள்வி எழுகிறது. இலங்கையில் மாகாண சபையானது அரசியல்வாதிகளுக்கு நாடாளுமன்றம் செல்வதற்கான ஓர் இடைக்காலமாகவே இருக்கிறது என்று குறிப்பிட்டார்.

இதேவேளை வடக்கு, கிழக்கு மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வாகவே மாகாண சபை கொண்டு வரப்பட்டது. எனவே, தற்போது அதனை இல்லாமல் செய்தால் அந்த மக்களுக்கான தீர்வுக் காண ஆரம்பம் இல்லாமல் போய் விடுமே என்று தினேஷ் குணவர்தனவிடம் கேள்வி எழுப்பிய போது அதற்கு பதிலளித்த முன்னாள் பிரதமர், கல்வி, சுகாதாரம், முதலீடுகள், விளையாட்டு உள்ளிட்ட விடயங்களில் மாகாண மட்டத்தில் பரந்துபட்ட வகையில் செயல்பட ஒரு பொறிமுறை அவசியம். அதனை நாடாளுமன்ற உறுப்பினர்களே செய்யலாம். தற்போது கூட மாவட்ட அபிவிருத்தி சபைக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களே தலைமை தாங்குகின்றனர். எனவே இதற்கு மாகாண சபை முறைமை தேவையற்றதாகவே நாங்கள் கருதுகிறோம். இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த முடியும். ஆனால் கடந்த காலங்களில் இதில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டதாக தெரியவில்லை. வடக்கில் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் இருந்த காலத்தில் கூட அங்கு மிகப் பெரிய மாற்றங்களோ அபிவிருத்திகளோ இடம்பெறவில்லை. – என்று சுட்டிக்காட்டினார்.



## வீதியை விட்டு விலகி

# பாரவூர்தி விபத்து! பல கடைகள் சேதம்!!

**(க.மகாதேவன்)**

குருநாகல் – கண்டி வீதியில் கலகெதர ஏக்கர் தோட்டம் பிரதேசத்தில் பாரவூர்தி ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. இதன்போது பாரவூர்தி பாரிய சேதத்துக்குள்ளானதுடன் அருகிலுள்ள பல கடைகளும் சேதமடைந்துள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் குருநாகல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







## எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் விவகாரம் :

# உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆராய குழுவொன்று நியமனம்

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் பேரழிவு தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆய்வு செய்வதற்காக இரண்டு மூத்த அதிகாரிகள் கொண்ட குழுவை சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க நியமித்துள்ளார்.

இந்த குழு, குறித்த விடயத்தில் சட்டமா அதிபர் திணைக்களம் எடுக்க வேண்டிய தொடர் நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, முன்னாள் சட்டமா அதிபர், இலங்கை குடியரசின் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கு மாறாக, சிங்கப்பூர் நீதிமன்றத்தில் எக்ஸ்-பிரஸ் பேர்ல் குழும நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள எடுத்த முடிவு, நியாயமற்றது, பகுத்தறிவற்றது மற்றும் தன்னிச்சையான முடிவு என்று உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியிருந்தது.

அத்துடன், கப்பல் நிறுவனம் முதல் கட்டமாக, 1 பில்லியன் அமெரிக்க டொலர்களை இழப்பீடாக செலுத்தவேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

# அக்கரைப்பற்று பிரதான வீதியில் காரும் ஓட்டோவும் மோதி விபத்து!






**(வடிவேல் டினேஸ்)**

அக்கரைப்பற்று – கல்முனை பிரதான வீதியில் அக்கரைப்பற்று மத்திய தபால் நிலையத்துக்கு முன்னால் கல்முனை பகுதி நோக்கிச் சென்ற ஓட்டோவும், அக்கரைப்பற்று நோக்கிப் பயணித்த காரும் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளன.

நேற்று இடப்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்த ஓட்டோ சாரதி அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்றுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# இந்தியாவில் இருந்து இலங்கையர் ஒருவரை ஏற்றி வந்த படகு கடற்படையினரிடம் சிக்கியது!

## நுவரெலியாவைச் சேர்ந்த நபர் உட்பட இருவர் கைது

**(ந.லோகதயாளன்)**

இந்தியாவில் இருந்து இலங்கையர் ஒருவரை ஏற்றி வந்த படகு மன்னார் கடற்பரப்பில் கடற்படையினரிடம் சிக்கியுள்ளது. இதன்போது அந்தப் படகில் இருந்த இலங்கையர் உட்பட இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் இராமேஸ்வர் தனுஸ் கோடியைச் சேர்ந்த 44 வயதுடைய ஒருவரும், இலங்கையின் நுவரெலியாவைச் சேர்ந்த ஒருவருமே கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களின் பயணம் தொடர்பில் பெரும் சந்தேகம் காணப்படுவதால் அவர்களைக் கடற்படையினர் தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

விசாரணையின் பின்னர் இன்று மன்னார் பொலிஸார் ஊடாக அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.



# ஆற்றுக்குள் கவிழ்ந்து ஓட்டோ விபத்து!

## சாரதி காயங்களுடன் வைத்தியசாலையில்

**(எஸ்.சதீஷ்)**

திம்புள்ள – பத்தனை பிரதேசத்தில் இருந்து ஹட்டன் நோக்கிப் பயணித்த ஓட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி டெவோன் கால்வாயில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்வம் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அதிவேகத்தில் ஓட்டோவைச் செலுத்தியமையால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் ஓட்டோவின் சாரதி காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைத் திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## புதிய சட்டச் சர்ச்சை

இலங்கையின் நீதி அமைச்சராக இருந்தவர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ. நீதித்துறையில் ஒரு விற்பன்னர்.

சட்ட - நீதித்துறை விடயங்களில் அவ்வப்போது கரிசனை மிக்க சர்ச்சைகளைக் கிளப்புபவர். அந்த சர்ச்சைகளில் அர்த்தம் அதிகம் இருப்பது கவனிக்கத்தக்கது.

இப்போதும் சட்டச் சர்ச்சை ஒன்றைக் கிளப்பியிருக்கிறார். அது ஊன்றி கவனிக்கப்படுகின்றது.

இலங்கையின் பொலிஸ்மா அதிபராக இருந்தவர் தேசபந்து தென்னக்கோன்.

அவர் அந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட முறைமையை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பான விசாரணையை அடுத்து, பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து அவரை இடைநிறுத்தும் உத்தரவை உயர் நீதிமன்றம் விடுத்தது.

அதேசமயம் அவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பதவி விலகல் தொடர்பான பிரேரணையின் அடிப்படையில் அவருக்கு எதிரான குற்ற விசாரணை ஒன்று நடைபெற்றது.

அந்த விசாரணைக் குழு அவரைக் குற்றவாளியாகக் கண்டுள்ள பின்னணியில், அவருக்கு எதிராக அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் அவரைப் பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நிரந்தரமாக நீக்குவதற்காக நாடாளுமன்றப் பிரேரணை ஒன்று வரும் ஐந்தாம் திகதி நாடாளுமன்றுக்கு வர இருக்கின்றது. அந்தப் பிரேரணை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டால் அதன் மூலம் தேசபந்து தென்னக்கோன் பதவியிலிருந்து விலக்கப்படுவார் என்று கூறப்படுகின்றது.

ஆனால் இதற்கிடையில் இப்போது நாடாளுமன்றம் நியமித்த சிறப்பு விசாரணை குழு தொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ காத்திரமான சட்டச் சர்ச்சை ஒன்றைக் கிளப்பியிருக்கிறார்.

பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து தேசபந்து தென்னக்கோனை அடிப்படை உரிமை மீறல் மனுவின் அடிப்படையில் இடைநிறுத்திய உயர் நீதிமன்றின் உத்தரவை விடுத்த அதே நீதியரசர், இப்போது நாடாளுமன்றம் நியமித்த சிறப்பு விசாரணை குழுவிலும் ஓர் அங்கத்தவராக இடம்பெற்று, தேசபந்து தென்னக்கோனுக்கு எதிரான குற்றத் தீர்ப்பை வழங்கியிருக்கிறார். இது நீதி முறைமைக்கு முரணானது என்று விஜயதாஸஸ ராஜபக்ஷ சுட்டிக் காட்டுவதில் சட்ட அர்த்தங்கள் அதிகம் இருப்பதாக சட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்தக் காரணத்தின் அடிப்படையில் நாடாளுமன்ற விசாரணை குழுவின் விசாரணை செல்லுபடியற்றது என்று தீர்ப்பளிக்கும்படி கோரி தேசபந்து தென்னக்கோன் உயர் நீதிமன்றத்துக்குச் சென்று வாதாட காத்திரமான சட்ட வலிமை இருக்கின்றது என விஜயதாஸ ராஜபக்ஷ சுட்டிக்காட்டுகிறார்.

எதிர்வரும் ஐந்தாம் திகதி நாடாளுமன்றுக்கு இந்த விவகாரத்தை ஒட்டிய பிரேரணை வருவதற்கு முன்னரே, தேசபந்து தென்னக்கோன் உயர் நீதிமன்றுக்கு சென்று, முன்னைய விசாரணை குழுவின் குற்றத் தீர்ப்புக்கு எதிராக தடை உத்தரவு பெற முடியும் என்பதுதான் விஜயதாஸ ராஜபக்ஷவின் கருத்து வெளிப்பாட்டின் அர்த்தமாகும்.

ஒரே நீதியரசர், ஒரே விடயத்தை ஒட்டி, ஒரே நபரை இரண்டு தடவைகள் தண்டிக்கக்கூடிய உத்தரவுகளை விடுப்பதோ, அத்தகைய ஒத்த விசாரணை மன்றங்களில் இடம் பெற்றுத் தீர்ப்பளிப்பதோ நீதி முறையாகாது என்பதை உயர்நீதிமன்றம் ஏற்றுக் கொள்வதற்கான சாத்தியங்கள் - வாய்ப்புகள் - உள்ளன என்று கூறப்படுகின்றது.

அப்படி தேசபந்து தென்னக்கோன் உயர் நீதிமன்றத்தை அடிப்படை உரிமை மீறல் மனுவின் பேரில் அணுகுவாராயின், இந்த விடயம் மேலும் இழுபடக்கூடிய சாத்தியமும், பொலிஸ்மா அதிபர் பதவி வெற்றிடமாகாமல் தொடர்ந்து நிரப்பப்படாமல் காலதாமதம் ஆவதற்கான வாய்ப்புகளும் அதிகம் இருப்பதாகவே தோன்றுகின்றது.

# நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்பு; 1,553 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்



வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போது 1,553 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த சுற்றிவளைப்புகளின் போது 302 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 76 பேரும் பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 40 பேரும் உள்ளடங்குகின்றனர்.

அத்துடன், போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கைக்காக 4,453 பாதுகாப்பு அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# பத்தாயிரம் சிவில் பாதுகாப்பு அதிகாரிகளை பொலிஸ் சேவையில் இணைக்கத் திட்டம்

பத்தாயிரம் சிவில் பாதுகாப்பு அதிகாரிகளை பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் போதைப் பொருள் சுற்றிவளைப்புகளை அதிகரிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

நாட்டிலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களையும் மையப்படுத்தி சிவில் பாதுகாப்பு அதிகாரிகளை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு பிரதியமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

நாட்டிற்குள் போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பை தடுப்பதனூடாக போதைப்பொருள் பாவனையை குறைக்க முடியுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

நாடளாவிய ரீதியில் இரவு மற்றும் அதிகாலை வேளையில் சுற்றிவளைப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு பிரதியமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.




# பகிடிவதையால் உயிரிழந்த சப்ரகமுவ மாணவன் விசாரணை அறிக்கை உபவேந்தரிடம் கையளிப்பு

பகிடிவதை காரணமாக சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஐவரடங்கிய குழுவின் அறிக்கை பல்கலைக்கழக உபவேந்தரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கை அடுத்த வாரம் நிர்வாகக்குழுவிடம் கையளிக்கப்படும் என பல்கலைக்கழக உபவேந்தர், பேராசிரியர் சுனில் ஷாந்த தெரிவித்தார்.

தொழில்நுட்ப பீட மாணவனின் மரணம் குறித்த காரணம் நிர்வாகக்குழுவின் மூலம் வெளிப்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

சம்பவம் தொடர்பாக 70 மாணவர்களிடமிருந்து வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக குழுவின் உறுப்பினரொருவர் தெரிவித்தார்.

அதன்படி அவர்களிடமிருந்து 150 மணித்தியாலங்களுக்கும் மேலாக சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.



# 49ஆவது பிரதம நீதியரசராக பிரீதி பத்மன் சூரசேன நியமனம்

இலங்கையின் புதிய பிரதம நீதியரசராக உயர் நீதிமன்றத்தின் சிரேஷ்ட நீதியரசரான பிரீதி பத்மன் சூரசேன, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முன்னிலையில் பதவியேற்றார்.

நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் அவர் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

பிரதம நீதியரசர் முர்து நிருபா பிந்துஷினி பெர்னாண்டோ ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து வெற்றிடமாகிய பதவிக்கு ப்ரீத்தி பத்மன் சூரசேனவின் பெயரை அரசமைப்பு சபை அண்மையில் அங்கீகரித்தது.

இதற்கமைய ப்ரீத்தி பத்மன் சூரசேன நாட்டின் 49ஆவது பிரதம நீதியரசராக பொறுப்பேற்றுக்கொண்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொண்டார்.

1989ஆம் ஆண்டு சட்டத்தரணியாக பதவியேற்ற ப்ரீத்தி பத்மன் சூரசேன, பின்னர் சட்ட மாஅதிபர் திணைக்களத்தில் இணைந்து அரச தரப்பு சட்டத்தரணியாக பணியாற்றியதுடன், 2007ஆம் ஆண்டு உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

2016ஆம் ஆண்டு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்ட அவர் 2018 ஆம் ஆண்டு மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவராகவும் 2019 ஆம் ஆண்டு உயர் நீதிமன்ற நீதியரசராகவும் நியமிக்கப்பட்டார்.

அப்போதிலிருந்து உயர் நீதிமன்ற நீதியரசராக செயற்பட்டுவரும் ப்ரீத்தி பத்மன் சூரசேன, முன்னாள் பிரதம நீதியரசர் முர்து பெர்னாண்டோவிற்கு அடுத்த உயர் நீதிமன்ற நீதிபதிகளில் சிரேஷ்ட நீதியரசர் ஆவார்.



# மரக்கறிகளின் விலை வீழ்ச்சி

போஞ்சி மற்றும் கறிமிளகாயை தவிர ஏனைய அனைத்து மரக்கறிகளின் விலைகளும் வேகமாக குறைந்துள்ளன என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

பொதுவாக நாட்டில் தற்போதைய பருவநிலை உருளைக்கிழங்கு விளைச்சலுக்கு தகுந்த காலமாகும்.

ஆனால், தற்போது உருளைக் கிழங்குக்கு பதிலாக வேறு மரக்கறிகள் பயிரிடப்படுகின்றமையால் ஏனைய மரக்கறிகளுக்கான கேள்வி குறைந்துள்ளது.

இதனாலேயே காய்கறிகளின் விலைகளும் வேகமாக குறைவடைவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

# 100 ஆரம்ப சுகாதார மையங்களை இவ்வாண்டுக்குள் நிறுவத் திட்டம்




நாட்டின் சுமார் 10,000 மக்களை உள்ளடக்கிய ஆரம்ப சுகாதார சேவை மையத்தை நிறுவுவதே தற்போதைய அரசாங்கத்தின் முக்கிய நோக்கம் எனச் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அதற்கமைய, 8 பணியாளர்களுடன் செயல்படவுள்ள 100 ஆரம்ப சுகாதார மையங்களை இந்த ஆண்டுக்குள் நிறுவச் சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அடுத்த 3 ஆண்டுகளில் நாடு முழுவதும் 2,000 ஆரம்ப சுகாதார சேவை மையங்கள் நிறுவப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

# முன்னாள் அமைச்சர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலை அறையிலிருந்து தொலைபேசி மீட்பு

முன்னாள் அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் நளின் பெர்னாண்டோ ஆகியோர் தடுத்து வைக்கப்பட்டுள்ள வெலிக்கடை சிறைச்சாலையின் அறையில் இருந்து ஆறு கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன.

சிறைச்சாலை அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கு அமைய சிறைச்சாலை அவசரகால பதிலளிப்பு குழுவினரால் நடத்தப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையில், மேற்படி கையடக்கத் தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக சில மின் சாதனங்களும் கண்டுபிடிக்கப்பட்டன என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலையின் “கே” அறையில் இருந்தே கையடக்கத்



தொலைபேசிகள் மற்றும் சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த அறையில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, நளின் பெர்னாண்டோ மற்றும் எம்.எஸ். ரஞ்சித் உள்ளிட்ட 100 இற்கும் மேற்பட்ட கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# சுற்றுலாப் பயணிகளின் வருகை 1.3 மில்லியனைக் கடந்தது



2025 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1.3 மில்லியனை கடந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதன்படி இதுவரை மொத்தமாக 1,313,232 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர்.

மேலும், ஜூலை மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 145,188 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய இந்தியாவில் இருந்து 27,786 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைதந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது





# மயிலிட்டி பேச்சியம்பாள் ஆலய மகோற்சவத்தின் தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், மயிலிட்டி திருப்பூர் அருள்மிகு பேச்சியம்பாள் ஆலயத்தின் மகோற்சவத்தின் தேர்த் திருவிழா இன்று இடம்பெற்றது.

நேற்று காலை 6.30 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் ஆரம்பமாகி, பேச்சியம்பாள் 8.00 மணியளவில் தேரேறினார்.

தேர் பவனியைத் தொடர்ந்து தூக்குக் காவடி, தீச்சட்டி ஏந்தி பக்தர்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினார்.

யுத்தம் காரணமாக 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து, 20219 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செயப்பட்ட போது கோவில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டது.

மயிலிட்டி வாழ் மக்கள் மற்றும் மயிலிட்டி புலம்பெயர் உறவுகளின் விடா முயற்சியால் மயிலிட்டி திருப்பூர் பேச்சியம்மன் கோவில் புனர்நிர்மானம் செய்யப்பட்டு கோபுரமும் சிறப்பாக அமைக்கப்பட்டு பூசை வழிபாடுகள் இடம்பெற்று வருகிறன.

2023 ஆம் ஆண்டு கும்பாவிசேகம் இடம்பெற்று தொடர்ந்து வருடம் தோறும் திருவிழா இடம்பெற்று வருகிறது.

இந் நிலையில் இவ்வாண்டுத் திருவிழா இணுவில் தர்மதாஸ்தா குருக்குல ஆசிரியரும் காயத்திரி பீட ஸ்தாபகர் ம.ஸ்ரீ வத்சாங்க குருக்கள் தலைமையில் மகோற்சவ குருக்கள் பு.சிவசொரூப குருக்கள் ஆலய நித்திய பூசகர் ரஜிதர சர்மா ஆகியோர் இணைந்து திருவிழாவை வழிநடாத்தி சிறப்பித்தனர்.















# இன்று அம்பாளின் ஆடிப்பூரம்!

ஆடிப்பூரம் அம்மனுக்குரிய நாளாகும்.

ஆடிப்பூரம் இன்று 28ஆம் திகதி திங்கட்கிழமை ஆகும். அம்பாளுக்கும் ஆண்டாளுக்கும் உரிய நாள், அன்றைய நாளில்தான் அம்பாள் பெண்மை அடைந்ததும் , உமா மகேஸ்வரியாக அவதரித்ததும், ஆண்டாளாக அவதரித்ததுமாகும். இதனால்தான் எல்லா அம்மன் ஆலயங்களிலும் அதற்கான சடங்குகள், சம்பிரதாயங்கள், விஷேட பூசைகள் நடக்கின்றன.

இந்த நாளில் அம்மனுக்கு மஞ்சள் காப்பு, சந்தன காப்பு, குங்கும காப்பு, வளைகாப்பு, வளையல் அலங்காரம் ஆகியவை பக்தர்களால் நடத்தப்படுகின்றன..

இந்த ஆடிப்பூர தினத்தை வளைகாப்பு நாளாக கருதி, அம்பாளுக்கு அபிஷேகம்செய்து, அலங்காரம்பண்ணி, பெரு விழாவாக கொண்டாடுகிறார்கள். அதற்கு காரணம் மூன்றாம் மாதத்தில் (பங்குனி உத்தரம்) நிறைய பெண் தெய்வங்களுக்கு திருமணம் நடந்தது. அதன்படி திருமணம் ஆகி, கருவுற்று ஐந்தாவது மாதம், ஏழாவது மாதம், ஒன்பதாவது மாதம் வளைகாப்பு நடத்துவது வழமை. இதன் அடிப்படையில் ஆடி மாதம் அம்பாளுக்குரிய ஐந்தாவது மாதம் என்பதால் வளைகாப்பு மாதமாக எல்லா அம்மன் ஆலயங்களிலும் சிறப்பாக கொண்டாடுகிறார்கள்.

இன்று 28 ஆம் தேதி திங்கட்கிழமை அம்பாள் ஆலயங்களில் விசேட பூசை அலங்காரங்கள் இடம்பெற உள்ளமையால் அன்றைய தினம் அனைவரும் ஆலயம் சென்று இன்னருள் பெறுவோமாக!

**- விபுலமாமணி வித்தகர்**
**வி.ரி.சகாதேவராஜா -**











# 'அம்மனுக்கு உகந்தது ஆடி மாதம்' இன்று ஆடிப்பூரம்...!

அம்மனுக்கு உகந்தது ஆடி மாதம். இதுவரை பகல் காலம் அதிகமாக வெப்பமாக இருந்த நிலை மாறி இரவு வெப்பம் அதிகமாகவும், பகல் வெப்பம் குறையும் காலம் ஆரம்பிப்பதால்தான் ஆடி மாதங்களில் எளிய உணவான கூழ் சாப்பிட்டால் உடம்புக்கு நல்லது என்று அம்மனுக்குக் கூழ் வார்க்கும் பழக்கத்தை ஏற்படுத்தினர் நமது முன்னோர்கள்.

இந்த ஆடி மாதத்தில் வெள்ளி, செவ்வாய், ஞாயிறுக்களில் அன்னையை வழிபட எல்லா நலன்களும் கிடைக்கும். இவ்வளவு சிறப்புகள் கொண்ட ஆடி மாதத்தில் வரும் பூரம் நட்சத்திரம் அம்பிகைக்கு மிகவும் உகந்த நாள்.

ஆடிப்பூரம் என்னும் விழா ஆடி மாதத்தில் பூர நட்சத்திரம் உச்சத்தில் இருக்கும் போது கொண்டாடப்படுவது. இது தேவிக்குரிய திருநாளாகும். இந்த நாளில்தான் உமாதேவியும் தோன்றினார் என்று கூறப்படுவதுண்டு. உலக மக்களை காக்க சக்தியாக அம்பாள் உருவெடுத்தாள். சித்தர்களும், யோகிகளும் இந்த நாளில் தவத்தை ஆரம்பிப்பர் என்று புராணங்கள் கூறுகின்றன.

அனைத்து உலகத்தையும் படைத்தும் காத்தும் கரந்தும் விளையாடும் அகிலாண்ட கோடி அன்னைக்கு மஞ்சள் காப்பு, சந்தனக்காப்பு, குங்குமக்காப்பு, நடத்துவார்கள். அந்த அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகிக்கு வளைகாப்பு நடக்கும் நாள் தான் ஆடிப்பூரம். அன்னை உளம் மகிழ்ந்து மாந்தர்கள் அனைவருக்கும் தன் அருளை வழங்கும் நாள். பல்வேறு விதங்களில் அன்னையைக் கொண்டாடும் நாள் திருவாடிப் பூரம்.

சைவத்தலங்களில் உற்சவ அம்மனின் திருநாமம் பெரும்பாலான இடங்களில் சுக்கிரவார அம்மனாக தனக்கு உகந்த வெள்ளிக்கிழமையின் பெயரைக் கொண்டு அருள் பாலிக்கும் அம்மன் அதற்கு அடுத்து ஆடிப்பூர அம்மனாக அதிகமாக எழுந்தருளியுள்ளாள். இதிலிருந்தே ஆடிப்பூரத்தின் சிறப்பை அறிந்து கொள்ளலாம்.

அம்மன் நித்ய கன்னி என்பதால் அம்மனுக்கு பிள்ளைப்பேறு வளைகாப்புக் கிடையாது என்பது ஐதீகம். அதற்காக ஆடிப்பூரம் அன்றைக்கு அம்மனுக்கு வளையல் அணிவித்து இன்று வளைகாப்பு தினமாக கொண்டாடப் படுகிறது. இந்த நாளில் அம்மனுக்கு மஞ்சள் காப்பு, சந்தன காப்பு, குங்கும காப்பு, வளைகாப்பு, வளையல் அலங்காரம் ஆகியவை பக்தர்களால் நடத்தப்படுகிறது.

கோயிலில் அம்மனுக்கு சாற்றப்பட்ட வளையல்களை வாங்கி அணியும் திரமணமாகாத பெண்களுக்கு திருமணம் விரைவில் நடைபெறும். அதே போல் திருமணமாகியும் குழந்தைப் பேறு இல்லாத பெண்களுக்கு நல்ல மக்கள்பேறு கிட்டும். ஆடிப்பூரம் அன்று அருகிலுள்ள அம்மன் கோயிலுக்குச் சென்று அம்மனுக்குக் கண்ணாடி வளையல்கள் வாங்கி அளிப்பது மிகவும் புண்ணியம் என்றும் கூறப்படுகிறது.

இந்த ஆடிப்பூர தினத்தை வளைகாப்பு நாளாக கருதி அம்பாளுக்கு அபிஷேகம் செய்து அலங்காரம் பண்ணி பெரு விழாவாக கொண்டாடுகிறார்கள், அதற்கு காரணம் மூன்றாம் மாதத்தில் (பங்குனி உத்தரம்) நிறைய பெண் தெய்வங்களுக்கு திருமணம் நடந்தது, அதன் படி திருமணம் ஆகி கருவுற்று ஐந்தாவது மாதம், ஏழாவது மாதம், ஒன்பதாவது மாதம் வளைகாப்பு நடத்துவது வழமை இதன் அடிப்படையில் ஆடி மாதம் அம்பாளுக்குரிய ஐந்தாவது மாதம் என்பதால் வளைகாப்பு மாதமாக எல்லா அம்மன் ஆலயங்களிலும் சிறப்பாக கொண்டாடுகிறார்கள்.

ஆடிப்பூரம் அம்பாளுக்கும் ஆண்டாளுக்கும் உரிய நாள், அன்றைய நாளில் தான் அம்பாள் பெண்மை அடைந்ததும் , உமா மகேஸ்வரியாக அவதரித்ததும், ஆண்டாளாக அவதரித்துமாகும், இதனால்தான் எல்லாம் அம்மன் ஆலயங்களிலும் சடங்குகள், சம்பிரதாயங்கள், விஷேட பூசைகள் நடக்கின்றன.

இன்று 28 ஆம் திகதி திங்கட்கிழமை அம்பாள் ஆலயங்களில் விசேட பூசை அலங்காரங்கள் இடம்பெறவுள்ளதால் இன்றைய தினம் அனைவரும் ஆலயம் சென்று இன்னருள் பெறுவோமாக!












# மட்டக்களப்பு வவுணதீவில் சம்பந்தனின் நினைவேந்தல்

**(வவுணதீவு நிருபர்)**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவரான அமரத்துவமடைந்த இராஜவரோதயம் சம்பந்தனின் ஓராண்டு நினைவேந்தல் அனுஷ்டிப்பு வவுணதீவில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம் பெற்றது.

மண்முனை மேற்கு பிரதேச சபையின் தவிசாளரும், பிரதேச தமிழரசு கட்சியின் தலைவருமான த.கோபாலப்பிள்ளை தலைமையில் வவுணதீவு சந்தைக் கட்டடத் தொகுதி மண்டபத்தில் இந் நிகழ்வு இடம் பெற்றது.

இதன் போது இரா. சம்பந்தனின் உருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் வைத்து, ஈகைச் சுடர் ஏற்றி நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

இவ் அஞ்சலி அனுஷ்டிப்பில், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், இரா. சாணக்கியன், இரா. சிறிநாத், முன்னாள் கிழக்கு மாகாண சபை அமைச்சர் கி. துரைராசசிங்கம், மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் சிவம் பாக்கியநாதன் மற்றும் பிரதேச சபைத் தவிசாளர்கள், கட்சி உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர்களானஞா.சிறிநேசன், இரா.சாணக்கியன், இரா.சிறிநாத், முன்னாள் கிழக்கு மாகாண சபை அமைச்சர் கி. துரைராசசிங்கம், தமிழரசு கட்சியின் வடக்கு கிழக்குக்கான இளைஞரணியின் தலைவர் கிருஷ்ணப்பிள்ளை சேயோன் உள்ளிட்ட பலர் அமரர் இரா. சம்பந்தன் பற்றிய நினைவுரைகளை நிகழ்த்தினர்.










# யாழ். குடா நாட்டிற்குள் மட்டுப்படுத்தப்பட்ட கட்சி தமிழரசுக் கட்சியை முடக்குவதற்கு முயல்கிறது

## சாணக்கியன் எம்.பி. சீற்றம்

யாழ். குடா நாட்டிற்குள் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு கட்சி, தமிழர்களின் தேசியக் கட்சியான தமிழரசை முடக்குவதற்கு முயற்சி செய்கின்றது என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்துள்ளார்.

கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வு சந்திவெளி விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

கறுப்பு ஜூலை நிகழ்வானது வருடந்தோறும் கட்டாயமாக நினைவுகூரப்பட வேண்டிய ஒன்றாகும். எமது இளைஞர்களுக்கு இவ்வாறான கொடூரமான சம்பவங்கள் நடைபெற்றமையினை தெளிவாக எடுத்துக்கூற வேண்டும். இதனூடாக இளைஞர்கள் எமது இனத்திற்கு நடைபெற்ற கொடூரமான படுகொலைகளை அவர்கள் அறிந்து கொள்வார்கள்.

இருப்பினும் 2009 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற அனைத்து படுகொலைகளுக்கும் துரதிஷ்டவசமாக நாம் நீதீ கேட்பது இலங்கை அரசாங்கத்திடம்தான்.இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தொடர்ச்சியாக சர்வதேச விசரணை வேண்டும் எனவும், சர்வதேச மேற்பார்வை வேண்டும் எனவும், சர்வதேச அழுத்தம் இருக்க வேண்டும் எனவும், சர்வதேசம் தலையிட வேண்டும் எனவும் எத்தனை முறை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்தாலும், இலங்கை அரசு ரோம் சட்டத்தில் கைச்சாத்திடவில்லை என்பதை கூறி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு செல்ல முடியாது என்பதை தொடர்ச்சியாக கூறி வருகின்றார்கள். தமிழரசுக் கட்சியானது தொடர்ந்தும் சர்வதேச விசாரணையினை கோரினாலும் இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக மறுத்து வருகின்றது.

முன்னர் இருந்த அரசாங்கங்கள் இந்தப் படுகொலைகளுக்கான நீதியை பெற்றுக்கொடுப்பதில் பின் நின்றன. ஏனென்றால் அவர்களும் அவற்றில் சம்பந்தப்பட்டவர்கள் என்பதாலே இவற்றிக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதில் அவர்கள் ஈடுபாடில்லாமல் ஆட்சியைப் புரிந்தனர். நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர் நடைபெற்ற படுகொலைகள் அனைத்தும் மாறி மாறி வந்த் அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது ஆட்சிக்கு வந்துள்ள ஜே.வி.பி. கட்சி 2024ஆம் ஆண்டு வரை எந்தக்காலப்பகுதியிலும் ஆட்சி செய்யாமையின் காரணமாக நடைபெற்ற படுகொலைகளுக்கு நீதி வழங்கப்படும் என்ற நம்பிக்கை பல தமிழர்களுக்கு இருந்தது. ஆனால் தமிழ் மக்களுக்கு நீதியை வழங்குவதற்கான முதலாவது சந்தர்ப்பத்தை அந்த அரசுத் தரப்பினர் தவறவிட்டுள்ளார்கள்.

அண்மையில் நாட்டிற்கு வருகைதந்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளரிடம்

தொடர்ச்சி▼









# யாழ். குடா நாட்டிற்குள் மட்டுப்படுத்தப்பட்ட கட்சி தமிழரசுக் கட்சியை முடக்குவதற்கு முயல்கிறது

## சாணக்கியன் எம்.பி. சீற்றம்

தொடர்ச்சி▲

தமிழரசுக் கட்சி சர்வதேச விசாரணை தேவை என்று கூறிய போது, இலங்கை அரசாங்கம் உள்நாட்டு பொறிமுறையினூடாக மாத்திரம்தான் தமிழ் மக்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதைக் கையாளப்போகின்றோம் என்பதை மிகத் தெளிவாக கூறியுள்ளார்கள்.

ரணில் விக்கிரமசிங்கவினால் சொல்லப்பட்ட ரி.ஆர்.சியினைத் தான் பயன்படுத்த போகின்றார் என அமைச்சர் விஜித ஹேரத் சொல்லியுள்ளார். என்.பி.பி.அரசாங்கத்தினூடாகவும் தமிழ் மக்களுக்கு எந்தவொரு நீதியும் கிடைக்கப்போவதில்லை என்பது உறுதியாகத் தெரிகின்றது.

நீதியை வழங்குவதன் ஊடாக எந்தவொரு தேசிய மக்கள் சக்தி கட்சியினரும் பாதிக்கப்படப்போவதில்லை. அப்படியிருந்தும் அதனை மறுக்கின்றார்காள் என்றால் இவர்களும் பெரும்பான்மை இனத்தைப் பாதுகாப்பதில் தெளிவாக இருக்கின்றார்கள்.

தமிழரசுக் கட்சியை உடைக்க வேண்டும் என்றும், பலவீனமாக்க வேண்டும் எனவும் சில தமிழ் கட்சிகள் உழைக்கின்றன. யாழ்குடா நாட்டிற்குள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட கட்சிகள் வடக்கு, கிழக்கு மக்களின் தேசியப் பிரச்சினை தொடர்பாக எப்படி பேச முடியும்? தமிழரசுக் கட்சியை விமர்சிப்பதை மாத்திரமே இவர்கள்தங்கள்கொள்கையாகக்கொண்டிருக்கின்றார்கள்.

தமிழ் மக்களுக்கெதிராக நடைபெற்ற அநீதிகளுக்கெதிராக மக்கள் தொடர்ந்தும் குரல் கொடுக்கின்றார்கள். இதனை தமிழரசுக் கட்சி முன்னெடுக்கின்றார்கள். தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியுடன் உள்ளார்கள் என்ற செய்தியைச் சொல்லவும் வருடந்தோறும் நினைவேந்தல்கள் செய்துகொண்டிருக்கின்றோம்.

தமிழ் மக்கள் இந்நாட்டிற்குள்ளே அகதிகளாக வாழக்கூடாது என்றால் – நிரந்தரமான – மீளப்பெறமுடியாத – அரசியல் தீர்வொன்று வேண்டும். அரசியல் தீர்வு விடயத்திலும் இந்த அரசாங்கம் பின்வாங்குகின்றது என்பதைத்தான் சொல்ல வேண்டும். அதிகாரப்பகிர்வுடன் கூடிய மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு கூட அரசாங்கம் இழுத்தடிப்பு செய்கின்றது. நிரந்தரமான அரசியற் தீர்வை ஒரு புதிய அரசமைப்பினூடாக கொண்டுவருவதற்கு காலதாமதமானாலும் கூட, உடனடியாக செய்யக்கூடியாக மாகாண சபைத்தேர்தலை நடாத்தாமல் இழுத்தடிப்புச் செய்கின்றது. அரசாங்கம் செய்யத்தவறியதனால் நான் நாடாளுமன்றத்திற்கு சட்டமூலம் கொண்டு வந்தபோது அது சாணக்கியனுடைய சட்டமூலம் என்று நீங்கள் நினைத்தால் அந்த சட்டமூலத்தை அரசாங்கத்தின் சட்டமூலமாக மாற்றி நடைமுறைப்படுத்துமாறும் கூறியுள்ளேன். ஆனால் இந்த அரசும் மாகாண சபை முறைமையைப் பலவீனப்படுத்தும் செயற்பாடுகளையே முன்னெடுத்துச் செயற்படுத்துகின்றது. – எனவும் தெரிவித்தார்.









# அம்பாறையில் ரி.எம்.வி.பி. முகாம்களில் இரண்டாவது நாளாக சி.ஐ.டி. சோதனை

## இனியபாரதியின் மற்றொரு சகாவும் கைது

(கனகராசா சரவணன்)

இனிய பாரதியின் சககாவான தொப்பி மனாப் என்றழைக்கப்படும் முன்னாள் திருக்கோவில் பிரசே சபை உறுப்பின ரான சி.விக்கினேஸ்வரன் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை குற்றப் புல னாய்வாளர்களினால் கைது செய்யப்பட் டார்.

அதேவேளை, அம்பாறை மாவட் டத் தமிழ் பகுதிகளில் கடந்த காலத் தில் இனியபாரதி தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (ரீ.எம். வி.பி.) கட்சியினர் இயங்கி வந்த முகாங் கள் மற்றும் மயானங்களில் இரண்டு தினங்களாக குற்றப் புலனாய்வாளர் கள் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர் என பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அம்பாறை திருக்கோவில் பிரதேச சபை யின் முன்னாள் தவிசாளர் உதயகுமார் துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய் யப்பட்ட சம்பவம் உட்பட 2005 மற்றும் 2008 க்கு இடையில் கிழக்கு மாகாணத் தில் நடந்த கொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல்கள், துப்பாக்கிக ளைப் பயன்படுத்துதல், சித்திரவதைக் கூடங்களை நடத்துதல், மிரட்டி பணம் பறித்தல் போன்ற சம்பவங்களுடன் தொடர்புபட்ட ரி.எம்.வி.பி. கட்சியைச் சேர்ந்த இனியபாரதி என அழைக்கப் படும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.புஷ்பகுமார் மற்றும் அவரது சகாவான சசீந்திரன் தவசீலன் ஆகியோரை கடந்த 6 ஆம் திகதி திருக் கோவில் மற்றும் மட்டு சந்திவெளி பகுதிகளில் வைத்து குற்றப் புலனாய்வா ளர்கள் கைது செய்திருந்தனர்.

இந்த கைதையடுத்து இனியபாரதி யின் முன்னாள் சாரதியான செந்துரான் கடந்த 9ஆம் திகதி பொத்துவிலில் இருந்து மட்டக்களப்புக்குதனியார்போக்கு வரத்து பஸ்ஸைச் செலுத்தி சென்ற போது அவரை கல்முனை நகரில் வைத்து குற்றப் புலனாய்வாளர்கள் கைது செய்தனர்.

இதனைத் தொடர்ந்து கைது செய் யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசா ரணையின் அடிப்படையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொழும்பில் இருந்து வந்த குற்றப் புலனாய்வாளர்கள் தம்பிலுவில் மகாவித்தியாலயத்துக்கு அருகில் பாட சாலை வீதியில் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கி வந்த இனியபாரதி யின் காரியாலயத்தை முற்றுகையிட்டு சோதனையில் ஈடுபட்டனர்.

அவ்வாறே தம்பிலுவில் பிரதான வீதி யில் இயங்கி வந்த ரி.எம்.வி.பி. முகாம், தம்பட்டையில் இயங்கி வந்த முகாம், திருக்கோவில் மயானம் போன்றவற் றுக்கு சென்று சோதனையில் ஈடுபட்ட னர். கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள தாளவெட்டுவான் சந்திக்கு அருகாமையில் உள்ள பாரிய வீட்டை ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்களை வெள்ளை நிற ஆடை அணிந்து இரண்டு வெவ்வேறு ஜீப்களில் கூட்டி வந்து அவர்களையும் வைத்துக் கொண்டு சோதனையிடனர்.

இதன் பின்னர் சம்மாந்துறையில் செயற்பட்ட முகாம் உட்பட அந்த கால பகுதியில் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்களில் ரி.எம்.வி.பி. முகாங் களாக செயற்பட்ட இடங்களுக்குச் சென்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு, அங்கு சந்தேகத்துக்கு இடமாக அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளின் நிலத்தைத் தோண்டி சோதனையிடுவ தற்கு நீதிமன்ற அனுமதியை பெறுவ தற்கான நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் தமிழ் மக்கள் விடு தலைப் புலிகள் கட்சியைச் சேர்ந்த இனிய பாரதியின் மற்றும் ஒரு சகாவான திருக்கோவில் விநாயகபுரத்தைச் சேர்ந்த முன்னாள் பிரதேச சபை உறுப்பினரான தொப்பிமனாப் என்றழைக்கப்படும் சின்னத்தம்பி விக்கினேஸ்வரன் அவரது வீட்டில் வைத்து நேறு ஞாயிற்றுக் கிழமை மாலை 3.00 மணியளவில் குற் றப் புலனாய்வாளர்கள் கைது செய்து கொழும்புக்கு விசாரணைக்காக கொண்டு சென்றுள்ளனர் என அந்தப் பொலிஸ் உயர் அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை குற்றப்புலனாய்வுத் துறையின் கொலை மற்றும் ஒழுங் கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழு, 2005 மற்றும் 2008 க்கு இடையில் கிழக்கு மாகாணத்தில் நடந்த கொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல்கள், துப்பாக்கிகளைப் பயன்படுத்துதல், சித்திரவதைக் கூடங்களை நடத்துதல் மற்றும் மிரட்டி பணம் பறித்தல் குறித்து நீண்ட விசாரணையை மேற்கொண் டது.

இந்த விசாரணையில், முதல் சந் தேக நபரான இனியபாரதி 2004 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப் பிலிருந்து வெளியேறிய கருணா அம்மான் பிரிவின் திருக்கோவில் பகுதி யில் உள்ள ஆயுதமேந்திய முகாமின் தலைவராகப் பணியாற்றியவர்.

இவர் 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் கருணாஅம்மான் பிரதி நிதித்துவப்படுத்தும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அரசியல் கட்சி யின் அம்பாறை மாவட்ட ஜனாதிபதி ஒருங்கிணைப்பு அதிகாரியாகப் பணி யாற்றியவர் என்பதுடன் 2012 முதல் 2015 வரை அந்தப் பிரிவு பிரதிநிதித் துவப்படுத்தும் கட்சியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினராகவும் பணி யாற்றியபோது பல படுகொலை மற் றும் ஆள்கள் கடத்தி காணாமல் ஆக் கப்பட்ட சம்பவங்களுடன் தொடர்பு பட்டுள்ளார் எனச் சந்தேகிக்கப்படு கின்றது.

# வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட 52 பேரின் நினைவேந்தல் நேற்று திருமலையில்!




(எஸ்.கீதபொன்கலன்)

வெலிக்கடை சிறையில் படு கொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் மூத்த தலைவர்களான தங்கத்துரை,குட்டிமணி,ஜெகன்,தேவன் உற்பட 52 தமிழ் அரசியல் கைதிகளின் 42 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று மாலை, திருகோண மலை கடற்கரையில் அமைந்துள்ள வெலிக்கடை தியாகிகள் நினைவுத் திறந்த வெளியரங்கில் நடைபெற்றது.

திருகோணமலை மாநகரசபை உறுப் பினரும், ரெலோ இயக்கத்தின் மாவட்ட உதவிச்செயலாளருமான எம்.பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ் வில் சிறையில் படுகொலை செய்யப்பட்ட திருகோணமலையை சேர்ந்தவர்களின் உறவினர்கள், இயக்கத்தின் அங்கத் தவர்கள், ஆதரவாளர்கள், பொது மக்கள் ஆகியோர் நினைவரங்க முன்றி லில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் பொதுச்சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

திருகோணமலை நகர சபையின் முன்னாள் தலைவர் காலஞ்சென்ற பெ.சூரியமூர்த்தி நகரசபைத் தலைவ ராக பணியாற்றிய காலத்தில், அவரது கடுமையான முயற்சியினால், அரசி னால் விடுக்கப்பட்ட பல்வேறு அழுத்தங்க ளுக்கு மத்தியில் திருகோணமலை கடற் கரையில் வெலிக்கடை தியாகிகள் நினைவு திறந்த வெளியரங்கு அமைக் கப்பட்டது.

இவ்வரங்கில் தமிழ்,சிங்களம், ஆங்கில மொழிகளில் அரங்கின் பெயர் பொறிக்கப்பட்டது. எனினும் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியிக் காலத்தில் திருகோணமலையில் நடத் தப்பட்ட சுதந்திரதின நிகழ்வின் போது இவ்வரங்கில் சிங்களம் மற்றும் ஆங் கிலத்தில் பொறிக்கப்பட்டிருந்த அரங் கின் பெயர் அகற்றப்பட்டதுடன் தமிழ் எழுத்துக்கள் மீது வெள்ளையடிக் கப்பட்டு மறைப்பு செய்யப்பட்டிருந் தது.



# கந்தபுரத்தில் ‘மக்களுடன் ஊராட்சி’ பிரதேசசபையின் நடமாடும் சேவை

(கி.வசந்தன்)

“மக்களுடன் ஊராட்சி” என்ற உயரிய நோக்கத்திற்காக மக்களுக்கான சேவையை மக்களிடம் சென்று வழங்குவதே இந்த நடமாடும் சேவையின் நோக்கமாகும். வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசம் என்பது பரந்து விரிந்தது. எனவே எமது சபைக்கு மக்கள் வருகைதந்து சேவையைப் பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமங்களை இலகுபடுத்துவதற்காக “மக்களுடன் ஊராட்சி” திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம் என வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தவிசாளர் பா.பாலேந்திரன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரின் ஊடக அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

முதற்கட்டமாக கந்தபுரம் வட்டாரத்தில் எதிர்வரும் 28,29 ஆம் திகதிகளில் நடமாடும் சேவையை நடாத்தவுள்ளோம். எதிர்காலத்தில் ஏனைய வட்டாரங்களுக்கும் இந்த நடமாடும் சேவையை விஸ்தரிக்கவுள்ளோம்.

விளம்பரப்பலகை கட்டணம், சோலைவரி, ஆதனப் பெயர் மாற்றம் ஆலோசனைகள், எல்லைக்கோட்டு சான்றிதழ் சேவை, வியாபார உரிமம், வியாபார வரி, வியாபார பெயர்ப்பதிவு, வழி அனுமதிப்பத்திர ஆலோசனைகள், கட்டட அனுமதி ஆலோசனைகள், கழிவகற்றல் சேவை, வீதி விளக்கு கோரிக்கைகள், ஆயுர்வேத மருத்துவ சேவை, நூலக நடமாடும் சேவையும் அங்கத்துவ படிவம் வழங்கலும், முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ளல், தலைவர் மற்றும் உறுப்பினர்களுடனான சந்திப்பு, 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட முன்மொழிவுகள் பெறல் உள்ளிட்ட மேலும் பல சேவைகளை இதன்போது பொதுமக்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



அந்த வகையில் எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் கந்தபுரம் வட்டாரத்திற்குட்பட்ட தோணிக்கல் கிராமிய அபிவிருத்தி சேவை மண்டபத்தில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரையில் நடைபெறும் இந்த சேவையில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு வட்டாரத்திற்குட்பட்ட பொதுமக்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன். - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

# அல்லைப்பிட்டியில் எரிந்த நிலையில் வயோதிபர் ஒருவரரின் சடலம் மீட்பு!



அல்லைப்பிட்டிப் பகுதியில் படுக்கையில் எரிந்த நிலையில் வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

3 ஆம் வட்டாரம் அல்லைப்பிட்டி வெண்புரவியைச் சேர்ந்த 84 வயதுடைய மணியாஸ் சேவியர் என்ற வயோதிபரே இவ்வாறு எரிந்த நிலையில் நேற்று முற்பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருபவை வருமாறு:-

வயோதிபர் வாழ்ந்த வீட்டில் இருந்து புகை வெளிவருவதை வீதியால் சென்ற அவரது உறவினர் அவதானித்து வீட்டின் உள்ளே சென்று பார்த்தபோது இந்த விபரீதத்தை அவர் கண்டுள்ளார்.

உடனடியாக ஊரவர்களை அழைத்து முதியவரை மீட்க முயற்சித்துள்ளார். ஆனாலும் முதியவர் தீயில் கருகி ஏற்கெனவே இறந்த நிலையில் இருந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிராமசேவகர் மற்றும் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு தீவகப்பகுதி மரண விசாரணை அதிகாரி என்.தியாகராசா சென்று, பார்வையிட்டு, சடலத்தை மீட்டு பொலிஸாரின் ஒத்துழைப்புடன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தார்.

கடந்த சில மாதங்களாக இந்த முதியவர் நடக்க முடியாத நிலையில் தனது வீட்டில் தனிமையில் வாழ்ந்து வந்துள்ளார்.

புகைப்பிடிக்கும் பழக்கம் கொண்ட முதியவர் பாவித்த பீடியின் மூலம் அவர் உறங்கும் மெத்தையில் ஏற்பட்ட தீயின் காரணமாகவே இந்த மரணம் ஏற்பட்டிருக்கலாம் என முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# ராஜராஜ சோழன், ராஜேந்திர சோழனுக்கு தமிழ் நாட்டில் பிரமாண்டமான சிலைகள்

## பிரதமர் மோடி உறுதி

ராஜராஜ சோழன் மற்றும் அவரது மைந்தன் ராஜேந்திர சோழன் இருவருக்கும் பிரமாண்ட சிலைகள் தமிழ் நாட்டில் அமைக்கப்படும் என்று உறுதி அளிப்பதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோயில் வளாகத்தில், மத்திய கலாச்சாரத் துறை சார்பில் ராஜேந்திர சோழனின் பிறந்த நாளான ஆடி திருவாதிரை விழா, கங்கை கொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோயில் கட்டத் தொடங்கிய ஆயிரமாவது ஆண்டு விழா, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மீது படையெடுத்துச் சென்ற ஆயிரமாவது ஆண்டு நிறைவு விழா என முப்பெரும் விழா நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட பிரதமர் நரேந்திர மோடி ‘வணக்கம் சோழ மண்டலம்’ என்று கூறி தனது உரையைத் தொடங்கினார். “நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க, இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க” என்று தமிழில் சிவனைப் போற்றினார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

“பிரகதீஸ்வரரின் பாதங்களில் அமர்ந்து வணங்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்துள்ளது. 140 கோடி இந்தியர்களின் நலனுக்காகவும், இந்தியாவின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்காகவும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கோவிலில் நான் பிரார்த்தனை செய்தேன். அனைவருக்கும் சிவபெருமானின் ஆசீர்வாதம் கிடைக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

சோழ மன்னர்கள் இலங்கை, மாலத்தீவுகள் மற்றும் தென்கிழக்கு ஆசியா



போன்ற பகுதிகளுடன் தங்கள் ராஜதந்திர மற்றும் வர்த்தக உறவுகளை கணிசமாக மேம்படுத்தினர். நான் நேற்று மாலத்தீவிலிருந்து திரும்பியது ஒரு தற்செயல் நிகழ்வு. இன்று இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க வாய்ப்பு கிடைத்தது என்னுடைய பாக்கியம்.

பிரிட்டனுக்கு முன்பாகவே சோழர்கள் குடவோலை முறையில் ஆட்சி செய்தனர். தங்கம், வெள்ளி அல்லது கால்நடைகளை மற்ற நாடுகளிலிருந்து கொண்டு வந்த பல மன்னர்களைப் பற்றி நாம் கேள்விப்படுகிறோம். ஆனால் ராஜேந்திர சோழன் கங்கை நதிநீரை கொண்டு வந்தார்.

இன்று மீண்டும் காசியிலிருந்து கங்கை நீர் இங்கு கொண்டுவரப்பட்டதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நான் காசியிலிருந்து வந்த மக்கள் பிரதிநிதி. எனக்கு கங்கைத் தாயுடன் பிணைப்பு உள்ளது. சோழ மன்னர்களின் இந்த செயல்பாடுகள், அவர்களுடன் தொடர்புடைய இந்த நிகழ்வு ‘ஒரே பாரதம், சிறந்த பாரதம்’ என்ற மாபெரும் பாரம்பரியத்துக்கான புதிய ஆற்றல், புதிய சக்தி, புதிய உத்வேகத்தை அளிக்கின்றன.

இன்று உலகமே நிலையற்ற தன்மை, வன்முறை மற்றும் சுற்றுச்சூழல் போன்ற பிரச்சினைகளால் போராடிக் கொண்டிருக்கும் வேளையில், தீர்வுகளுக்கான பாதையை சைவ சிந்தாந்த கொள்கைகள் நமக்குக் காட்டுகின்றன. அன்பே சிவம் என்ற திருமூலரின் கருத்தை உலகம் ஏற்றுக்கொண்டால், பெரும்பாலான நெருக்கடிகள் தானாகவே தீர்க்கப்படும். இந்தியா இந்தக் கருத்தை ஒரு உலகம், ஒரு குடும்பம், ஒரு எதிர்காலம் என்ற வடிவத்தில் முன்னெடுத்துச் செல்கிறது.

வரவிருக்கும் காலங்களில் ராஜராஜ சோழன் மற்றும் அவரது மைந்தன் ராஜேந்திர சோழன் இருவருக்கும் பிரம்மாண்ட சிலை தமிழ்நாட்டில் அமைக்கப்படும் என்று உறுதி அளிக்கிறேன். இன்றைய இந்தியா தனது பாதுகாப்பை மிக முக்கியமானதாகக் கருதுகிறது. இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மையை யாராவது தாக்கினால், இந்தியா அதன் சொந்த மொழியில் எவ்வாறு பதிலளிக்க வேண்டும் என்பதை ஒபரேஷன் சிந்தூரின் போது உலகம் கண்டது.

இந்தியாவின் எதிரிகள் மற்றும் பயங்கரவாதிகளுக்கு உலகில் பாதுகாப்பான இடம் இல்லை என்பதை ஒபரேஷன் சிந்தூர் தெளிவுபடுத்தியுள்ளது. ஒபரேஷன் சிந்தூர் ஒரு புதிய உத்வேகத்தைத் தூண்டியுள்ளது. புதிய தன்னம்பிக்கையை விதைத்துள்ளது. நாடு முழுவதும் மக்கள் அதனை கொண்டாடுகிறார்கள். அது இந்தியாவின் வலிமையையும் உறுதியையும் உலகமே ஒப்புக்கொள்ள வைத்துள்ளது.” என்று தெரிவித்தார்.

# அகமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இடைக்கால இழப்பீடு விடுவிப்பு

அகமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்த 166 பேரின் குடும்பங்களுக்கு இடைக்கால இழப்பீடு விடுவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் அகமதாபாத் நகரில் ஏர் இந்தியா விமானம் விபத்தில் சிக்கியது. இதில் 260 பேர் உயிரிழந்த நிலையில், விபத்தில் உயிரிழந்த 166 பேரின் குடும்பங்களுக்கு இடைக்கால இழப்பீடாக 25 லட்சம் ரூபாவை ஏர் இந்தியா விமான நிறுவனம் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜுன் 12 ஆம் திகதி அன்று அகமதாபாத்தில் இருந்து லண்டனுக்கு புறப்பட்ட ஏர் இந்தியாவின் போயிங் 787 ரக விமானம், மருத்துவக் கல்லூரியின் விடுதி கட்டடத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் விமானத்தில் இருந்த 241 பேரும், விடுதியில் இருந்த 19 பேர் உட்பட 260 பேர் உயிரிழந்தனர். விமானத்தில் பயணித்தவர்களில் ஒருவர் மட்டுமே உயிர் பிழைத்தார்.

இந்த விபத்தில் உயிரிழந்த ஒவ்வொருவரின் குடும்பத்துக்கும் டாடா குழுமம் 1



கோடி ரூபா வழங்கும் என்று அறிவிக்கப்பட்டது. காயமடைந்தவர்களின் மருத்துவச் செலவு, அவர்களுக்கான சிகிச்சையை உறுதி செய்வோம் என்றும் டாடா அறிவித்தது. விபத்தில் சேதமடைந்த மருத்துவக் கல்லூரியின் விடுதி கட்டிடத்தை புனரமைப்பதில் டாடா குழுமத்தின் பங்கு இருக்கும் என்றும் அப்போது தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், தற்போது இடைக்கால இழப்பீடாக 25 லட்சம் ரூபாவை விபத்தில் உயிரிழந்த 166 பேரின் குடும்பங்களுக்கு ஏர் இந்தியா விடுவித்துள்ளது. விமானத்தில் பயணித்தவர்களில் 147 பேரின் குடும்பத்துக்கும், விபத்து நடந்த இடத்தில் உயிரிழந்த 19 பேரின் குடும்பத்துக்கும் இந்த இடைக்கால இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 52 பேருக்கு இடைக்கால இழப்பீடு வழங்குவதற்கான ஆவணங்களை சரிபார்த்து உள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. அவர்களுக்கான இடைக்கால இழப்பீடு விரைந்து வழங்கப்படும் என்றும் இது 1 கோடி ரூபா இழப்பீட்டு அட்ஜெஸ்ட் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# காங்கோ கத்தோலிக்க தேவாலயம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 38 பேர் பலி

காங்கோ நாட்டில் உள்ள ஒரு கத்தோலிக்க தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் குறைந்தது 38 பேர் கொல்லப்பட்டனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

துப்பாக்கிகள் மற்றும் கூர்மையான ஆயுதங்களைப் பயன்படுத்தி பயங்கரவாத குழுவினால் இந்தக் கொலைகள் மற்றும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என தெரிவிக்கப்படுகிறது.

சம்வத்தில் மேலும் 15 பேர் காயமடைந்துள்ளனர் என கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலை ஐ.எஸ்.ஐ.எஸ் உடன் தொடர்பு கொண்ட ஏ.டி.எஃப் கிளர்ச்சியாளர்கள் நடத்தியுள்ளனர். அவர்கள் தொடர்ந்து இவ்வாறு பொது மக்கள் மீதான தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

# காசாவில் 10 மணிநேர தற்காலிக போர் நிறுத்தம்



காசாவில் மனிதாபிமான உதவிகள் வழங்குவதை எளிதாக்குவதற்காக, நேற்று முதல் மூன்று பகுதிகளில் நாளாந்தம் 10 மணிநேர தற்காலிக போர் நிறுத்தத்தை அமுல்படுத்துவதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் அறிவித்துள்ளன.

காசாவில் பரவலான பட்டினி மற்றும் மோசமடைந்து வரும் மனிதாபிமான நிலைமைகள் குறித்த கவலைகள் அதிகரித்து வரும் நிலையில், நிவாரணப் பணியாளர்கள் பாதுகாப்பாகச் செல்வதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த தற்காலிக போர் நிறுத்தம் தினமும் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை, அமுலில் இருக்கும் என இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் அறிவித்துள்ளன.



# கிரீஸில் வேகமாக பரவும் காட்டுத் தீ

கிரீஸ் நாட்டில் காட்டுத் தீ வேகமாகப் பரவி வருவதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அங்கு தற்போது வெப்பமான கால நிலை நிலவும் நிலையில் தொடர்ந்தும் காட்டுத் தீ பரவினால், வெப்பம் மேலும் அதிகரிக்கக்கூடும் என எச்சரிக்கப் பட்டுள்ளது.

ஏற்கனவே, அங்குள்ள சில பகுதி களில் வெப்பநிலையானது 44 பாகை செல்சியசாக பதிவாகியுள்ளது.

கிரீசில் ஏற்பட்டுள்ள தீப்பரவலால், அண்டை நாடான துருக்கி இதுவரை இல்லாத அளவுக்கு அதிக வெப்ப நிலையைப் பதிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.







# இன்றைய ராசி பலன்கள் -28.07.2025




இன்று சாதகமான நாளாக அமையாது. உங்கள் நண்பர்கள் மற்றும் உடன் பணி புரிவோர்களின் மறைமுகமான எதிர்ப்புகள் காணப்படும். உரையாடும் போது கவனம் தேவை.

உங்கள் பணிகளில் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள் சக பணியாளர்களின் தொல்லைகள் காணப்படும். கவனக் குறைவின் காரணமாக சில நல்ல வாய்ப்புகளை இழப்பீர்கள்.

இன்று நீங்கள் உணர்ச்சிவசப்பட்டு காணப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இதனை தவிர்த்தல் நலம்.

நிதி நிலைமை மோசமாக காணப்படும். உங்கள் தேவைகள் மற்றும் அதிகரிக்கும் செலவினங்களை எதிர்கொள்வதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உருவாகலாம். சரியான நேரத்தில் முறையான உணவு மேற்கொள்வது நல்லது.




இன்று வளர்ச்சிக்கு உகந்த நாள். இன்றைய நாளை சரியாக திட்டமிட்டால் நீங்கள் வெற்றி பெறலாம்.உங்கள் அணுகுமுறையில் இன்று உறுதியுடன் காணப்படுவீர்கள். முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று நீங்கள் விரைந்து பணியாற்றுவீர்கள். உங்களிடம் காணப்படும் நம்பிக்கையை பணியில் வெளிப்படுத்துவீர்கள்.

இன்று நீங்கள் உங்கள் துணைக்கென நேரம் ஒதுக்குவீர்கள். இது உங்கள் இருவருக்கும் இடையே உறவுப் பிணைப்பை வலுப்படுத்தும்.

உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும். உங்கள் பணத்தை முதலீடு செய்வதன் மூலம் உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். யோகா மேற்கொள்வது நல்ல பலனைத் தரும்.




நீங்கள் வெளிப்படையாகவும் விஷயங்களை லேசாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும்.அனுசரனையான போக்கை மேற்கொள்ள வேண்டும்.அமைதியாக இருங்கள். அனைத்தும் நல்லபடியாக நடக்கும்.

இன்று கவனமுடன் பணியாற்றுங்கள். கவனச் சிதறலுக்கு இடம் அளிக்காதீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் திணிக்காதீர்கள். அவருடைய உணர்வுக்கும் மதிப்பு கொடுப்பதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

அதிகப்படியான செலவுகள் கவலையை அளிக்கும். நீங்கள் சிறப்பாக சேமிக்க ஒரு திட்டத்தை அமைத்துப் பின்பற்ற வேண்டும்.

இன்று வயிறு உப்பசம் ஏற்படலாம். உங்கள் உணவில் கவனம் செலுத்தவும்.




இன்று பொறுப்புகளும் பதட்டமும் காணப்படுவதால் பக்தியுடன் ஸ்லோகம் சொல்வதன் மூலம் நீங்கள் உங்கள் மனதை அமைதியாக வைத்துக் கொள்ள முடியும்.இசையை கேட்பதன் மூலமாகவும் உங்கள் மனதை பதட்டமின்றி வைத்துக் கொள்ள முடியும்.

சக பணியாளர்களிடம் நல்ல விதமாக நடந்துகொள்ளுங்கள். அவர்களை கவனமுடன் கையாளுங்கள்.

இன்று உங்கள் துணையிடம் மனம் திறந்து உணர்வுகளை பகிர்ந்து கொள்வது நல்லது. இது நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

உங்களிடம் குறைந்த அளவு பணம் காணப்படும். பெரிய அளவில் முதலீடு செய்யும் முடிவை தவிர்த்தல் நல்லது.

கணுக்கால் மற்றும் தோள்களில் வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. யோகா மேற்கொள்வது ஆறுதலைத் தரும்.




இன்று உற்சாகத்துடனும் ஆற்றலுடனும் இருக்க வேண்டும்.கவலைகளுக்கு இடம் அளிக்க வேண்டாம். எப்பொழுதும் நல்லதையே நினைக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை முன்னுரிமைப்படுத்தி செயலாற்றுவதன் மூலம் பணியில் பின் தங்குவதை தவிர்க்கலாம்.

உங்கள் ஈகோவைத் தவிர்ப்பது நல்லது. நல்ல புரிந்துணர்வையும் அன்பையும் வெளிப்படுத்துவது உங்கள் உறவுக்கு நல்லது.

உங்கள் வீட்டின் முன்னேற்றத்துக்காகப் பணத்தைச் செலவு செய்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது. செரிமானக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்று உங்களுக்கு சிறந்த பலன்கள் கிடைக்கும்.நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். பிறரிடம் உரையாடும் போது கவனித்து உரையாட வேண்டும்.

பணிகளில் திறமைகளை வெளிப்படுத்தி உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள். சிக்கலான பணிகளையும் கவனமாகவும் எளிதாகவும் கையாள்வீர்கள். இன்று உங்கள் வளர்ச்சி உறுதி.

உங்கள் துணையிடம் இனிமையான உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

உங்களிடம் காணப்படும் பணம் போதுமானதாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.

அவநம்பிக்கை எண்ணங்களை தவிர்த்து விடுங்கள். இதனால் எப்பொழுதும் ஆரோக்கியமாக இருக்கலாம்.




இன்று புதிய தொடர்புகள் ஏற்படும். அவர்களின் ஆதரவு கிடைக்கும். இன்று முழுவதும் மிகுந்த மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். உங்கள் சாதனைகள் குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

நீங்கள் சிக்கலான பணிகளையும் எளிதாக கையாள்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியைத் தரும். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிட்டும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வது நல்லது. இதனால் இருவரும் மகிழ்வுடன் இருக்க முடியம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் வகையில் அது கிடைக்கப் பெறலாம்.

இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். யோகா செய்வது ஆரோக்கியத்திற்கு நல்லது.




உங்களுக்கு சிறந்த பலன்கள் கிடைக்கும். ஆனால் மெதுவாகத் தான் கிடைக்கும்.உங்கள் கடின உழைப்பை மட்டுமே நீங்கள் நம்ப வேண்டும்.முக்கியமான செயல்கள் செய்வதை இன்று தவிர்க்கவும்.

உங்கள் பணிகளை திட்டமிட்டு அதற்கேற்றாற் போல செயலாற்றுங்கள். இதன் மூலம் பணிகளை நல்ல தரத்துடன் உரிய நேரத்தில் முடிக்க இயலும்.

உங்கள் துணையுடன் சிரித்து பேசி பழகுங்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும். உரையாடும் போது தெளிவாக பேசவும்.

பணத்தை மிகுந்த கவனமுடன் கையாளவும். அதுவும் குறிப்பாக பயணத்தின் போது கவனம் தேவை. குறைந்த அளவு பணமே எடுத்துச் செல்லவும்.

நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம். தியானம் மேற்கொள்வது நல்லது.

# இன்றைய ராசி பலன்கள் -28.07.2025




இன்று முழுவதும் நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.இன்று உங்கள் பொறுமை சோதிக்கப்படும்.முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியிடத்தில் கவனச் சிதறலுக்கு ஆளாகாதீர்கள். அதனால் தவறுகளை தவிர்க்க முடியும்.

இருவருக்கும் இடையிலான கருத்து வேற்றுமையை தவிர்க்கவும். மகிழ்ச்சியாக இருபதற்கு முயற்சி செய்யவும்.

உங்கள் செலவுகளை கண்காணிக்கவும். பணத்தை கவனமாக கையாளவும். எதிர்மறையான எண்ணங்களை தவிர்க்கவும்.

தோள்களில் வலி ஏற்படலாம். தகுந்த மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.




வேறு எந்த நாளையும் விட இன்று நீங்கள் வெற்றி காண்பீர்கள். உங்கள் அணுகுமுறையில் உறுதி காணப்படும்.சுய முன்னேற்றத்திற்காக பாடுபடுவீர்கள்.

பணிநிமித்தமானபயணம்காணப்படும். உங்கள் கடின உழைப்புக்குப் பலன் கிடைக்கும்.

இனிமையான பேச்சு மூலம் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். அவரை விரும்ப ஆரம்பிப்பீர்கள். இது அவருக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்களிடம் அதிக பணம் காணப்படும். வெளிநாட்டிலிருந்து பணம் கிடைப்பத ற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பாராமரிப்பீர்கள். ஆரோக்கியத்தை தக்க வைக்க சத்தான உணவை உண்ணவும்.




இன்று உங்களுக்கு சிறந்த நாள். உங்கள் நீண்ட நாள் ஆசை நிறைவேறும் நாள். இது உங்களுக்கு மிகுந்த திருப்தியை அளிக்கும். நீங்கள் மிகவும் ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணிகள் பாராட்டைப் பெறும். இது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இருவருக்கும் இடையே நல்ல அன்பு மலரும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். அத்தியாவசியமான நோக்கங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். நன்றாக உண்டு உறங்குவதன் மூலம் சிறந்த ஆரோக்கியத்தை தக்க வைத்துக் கொள்ளலாம்.




விரைவான திடீர் முடிவுகளை இன்று எடுக்காதீர்கள். யோசித்து அதற்கேற்றாற் போல செயல்பட வேண்டும்.உங்கள் எண்ணத்திலும் செயலிலும் பக்குவம் தேவை.

பணியிடத்தில் தொழில் சார்ந்த அணுகுமுறை தேவை. எந்தவிதமான கவனச் சிதறலுக்கும் ஆளாகாதீர்கள்.

பாதுகாப்பற்ற உணர்வோடு உங்கள் துணையுடன் பழகாதீர்கள். இது உங்கள் உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பணத்தை கவனமாக கையாள வேண்டும். அதிகமாக சேமிக்க வேண்டும்.

முதுகு வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. யோகா மற்றும் தியானம் மேற்கொள்வது உதவிகரமாக இருக்கும்.

# வவுனியாவில் மாடு வெட்டும் தொழுவத்தை மூடுமாறு கூறவில்லை என்கிறார் முதல்வர்




(கி.வசந்தன்)

மாநகர சபைக்குட்பட்ட தாண்டிக்குளம் மாடு வெட்டும் தொழுவத்தையும் இறைச்சிக் கடைகளையும் மூடுமாறு இது வரை எந்தவித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என வவுனியா மாநகர சபை முதல்வர் சு.காண்டீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாநகர சபை முதல்வரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஞாயிறு தினமான இன்று (நேற்று) மாநகர சபையின் கோரிக்கையை ஏற்று வவுனியா வர்த்தகர்கள் தங்களுடைய வியாபார நிலையங்களை மூடிப் பணியாளர்களுக்கு விடுமுறையை வழங்கியுள்ளனர். எமது கோரிக்கையை ஏற்று ஒத்துழைப்பு வழங்கிய மாநகரத்தின் வர்த்தகப் பெருமக்கள் மற்றும் ஊழியர்களுக்கு சபை சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேபோல் தனியார் கல்வி நிலையங்களும் இன்று ஞாயிற்றுக்கிழமை மூடப்பட்டு தமது ஒத்துழைப்பை வழங்கியிருக்கின்றன. எனவே அது சார்ந்த கல்விச் சமூகத்திற்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். இது கல்வி நிலையங்களின் வருமானத்தை வீழ்ச்சியடையச் செய்வதற்கான ஒரு செயற்பாடு அல்ல.

மாறாக மாணவர்களிற்கு அறநெறிக் கல்வியை ஊட்டி அதனுடன் கலை, கலாசாரம் தொடர்பான விடயங்களிலும் அவர்கள் முன்நோக்கிச் செல்ல வேண்டும் என்பதற்காகவே இந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, தற்போது பிரச்சனையாகியுள்ள எமது சபைக்குட்பட்ட மாட்டுத் தொழுவத்தையும் இறைச்சிக் கடைகளையும் நாங்கள் ஒரு போதும் மூடவில்லை. அங்கு கடந்த வெள்ளிக்கிழமை மின்சாரம் தடை பட்ட போதும் சனிக்கிழமை சபையின் ஒத்துழைப்புடன் மாடுகள் வெட்டப்பட்டு கடைகளுக்கு இறைச்சி அனுப்பப்பட்டுள்ளது.

ஆனால் மறுநாள் ஞாயிற்றுகிழமை எந்தவித அறிவித்தலும் இல்லாமல் தொழுவத்தையும் இறைச்சிக் கடைகளையும் அவர்களாக மூடியுள்ளனர். நாங்கள் அதனை மூடுமாறு எந்தவித உத்தியோக பூர்வ உத்தரவையும் இன்று வரை பிறப்பிக்கவில்லை என்பதை எமது மாநகர மக்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்த செயற்பாடு மாட்டிறைச்சி தேவையுடைய மக்களை குழப்பும் விதத்திலும் இங்கு ஒரு பிரச்சினையை ஏற்படுத்தும் விதமாகவும் அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக எதிர்வரும் கிழமைகளில் நடைபெறவுள்ள சபைக் கூட்டத்தில் முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்படும். அன்றைய அமர்வில் எமது சமூகத்தால் ஏற்றுக் கொள்ளமுடியாத பல விடயங்களும் வெளிவரும். – என்றார்.